# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.1515/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | மணிகண்டன் | த–பெ | சரணவணன் |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 39/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | தொழில் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.04.2026**

**எதிரிகள் ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. 21.06.2020 அன்று இரவு 8.00 மணியளவில் நான் செல்லப்பா பள்ளி அருகே இருந்த போது அங்கு இருட்டாக இருந்ததால் யார் யார் வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. யார் எதை வைத்து அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. எனக்கு முதுகு, கை ஆகிய இடங்களில் காயங்கள் ஏற்பட்டிருந்தது. பின்னார் நான் காரைக்குடி அப்போலோ மருத்துவமனைக்கு இரவு 9.00 மணிக்கு சிகிச்சை சென்றேன். போலீஸ் என்னை விசாரணை செய்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது அல்ல. கையொப்பம் என்னுடையது அல்ல.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 21.06.2020 அன்று குன்றக்குடி காவல் நிலைய சார்பு ஆய்வாளார் விசாரணை செய்த போது மேற்படி ஆஜர் 1ம் எதிரி எனது அண்ணன் என்றும், 2, 3 எதிரிகள் அவருடைய நண்பர்கள் என்றும், தங்களுக்குள் சொத்து பிரச்சனை இருப்பதால் கடந்த 18.06.2020 தேதி இரவு 8.30 மணிக்கு தோட்டத்தில் இருந்த போது 1ம் எதிரி எனது அண்ணன் அழைத்ததின் பேரில் செல்லப்பா பள்ளி அருகே சென்றதாகவும், அப்போது எதிரிகள் 3 பேரும் அசிங்கமாக பேசினார்கள் என்றும், 2, 3 எதிரிகள் கையில் வைத்திருந்த அருவாள் மற்றும் வாள் ஆகியவை காட்டி கொலை செய்துவிடுவதாக மிரட்டினார்கள் என்றும், 2, 3 எதிரிகள் கையில் வைத்திருந்த வாள் மற்றும் அருவாளால் கை, கால் மற்றும் கழுத்து, முதுகு ஆகிய இடங்களில் வெட்டி காயத்தை ஏற்படுத்தினார்கள் என்று புகார் கொடுத்து விட்டு தற்போது 1ம்எதிரி அண்ணன் என்பதாலும், 2, 3 எதிரிகள் அவர் நண்பர்கள் என்பதாலும் உண்மை சம்பவங்களை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பொறியியல் இளநிலை பட்டம் பெற்றுள்ளேன் என்றால்சரிதான். நான் ஆங்கிலத்தில்

தான் கையொப்பம் செய்வேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றும் தற்போது பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால்சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.21 15:17:43 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.1515/2022 P.W.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சுகுமார் | த–பெ | சீனிவாசன் |
| ஊர்: | : | இலுப்க்குடி | | |
| வயது: | : | 42/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஓட்டுநர் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.04.2026**

**எதிரிகள் ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் இலுப்பக்குடியில் வசித்து ஓட்டுநராக பணி செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் எதிரிகளை தெரியும். சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 21.06.2020 அன்று குன்றக்குடி காவல் நிலைய சார்பு ஆய்வாளார் விசாரணை செய்த போது எதிரிகளை தெரியும் என்றும், அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் சொத்து பிரச்சனை இருப்பதால் கடந்த 18.06.2020 தேதி இரவு 8.30 மணிக்கு அ.சா.1 மற்றும் நானும் தோட்டத்தில் இருந்த போது 1 ம் எதிரி அழைத்ததின் பேரில் செல்லப்பா பள்ளி அருகே சென்றதாகவும், அப்போது எதிரிகள் 3 பேரும் அசிங்கமாக பேசினார்கள் என்றும், 2, 3 எதிரிகள் கையில் வைத்திருந்த அருவாள் மற்றும் வாள் ஆகியவை காட்டி அ.சா.1 ஐ கொலை செய்துவிடுவதாக மிரட்டினார்கள் என்றும், 2, 3 எதிரிகள் கையில் வைத்திருந்த வாள் மற்றும் அருவாளால் அ.சா.1 ன் கை, கால் மற்றும் கழுத்து, முதுகு ஆகிய இடங்களில் வெட்டி காயத்தை ஏற்படுத்தினார்கள் என்றும் அ.சா.1 கொடுத்த புகாரின் பெயரில் போலீசார் என்னை விசாரித்த போது மேற்படி சம்பவங்களை கூறி விட்டு தற்போது உண்மை சம்பவங்களை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.21 15:17:50 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.